பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : பங்குனி 23 (5—4—68) வெள்ளி ★ வெளியூர் : பங்குனி 24 (6—4—68) சனி [இதழ் : 245

சென்னை நகரில் தடையுத்தரவு நீடிப்பு

சென்னை, ஏப். 5—

சென்னை நகரில் பதட்ட நிலைமை தோன்றியதைத் தொடர்ந்து ஊர்வலங்கள்—பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டிருந்த போலீசுத் தடையுத்தரவு மேலும் ஐந்து நாட்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

ஏப். 10-ம் நாள் நள்ளிரவு வரையில், இந்தத் தடையுத்தரவு அமுலில் இருக்கும்.

நெசவாளர் பிரதிநிதிகளை அமைச்சர் மாதவன் சந்திக்கிறார்

அறப்போரை நிறுத்தும்படி பரமக்குடி நெசவாளர்கட்கு அரசு வேண்டுகோள்

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போக்க சோமப்பா யோசனை

சென்னை, மே 5—

பரமக்குடியில் சில கோரிக்கைகளை முன்வைத்து அறப்போர் தொடங்கியுள்ள கைத்தறி நெசவாளர்களை, அமைச்சர் திரு. செ. மாதவன் நாளை சந்திக்கிறார்.

அமைச்சர் நெசவாளர் தலைவர்களைச் சந்தித்துப்பேச இருப்பதை முன்னிட்டு. அறப்போரைக் கைவிடுமாறு தமிழக அரசு, நெசவாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசின் வேண்டுகோளுக்கிணங்க, பரமக்குடி நெசவாளர்கள், அறப்போரைக் கைவிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

"கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள கடுமையான மந்த நிலை காரணமாக, பரமக்குடி வட்டத்தில் மட்டும் 30,000 நெசவாளர்கள் வேலையின்றி இருக்கின்றனர்; அங்கு ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள சரக்குகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன"

என்று அனைத்திந்திய கைத்தறித் துணி சங்கத் தலைவர் திரு. எம். சோமப்பா, பெங்களூரில் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

"அங்குள்ள 18 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 11 சங்கங்கள், சரக்கு முடக்கம் காரணமாகவும், ரிசர்வ் பாங்கியின் கடன் கொள்கையால் ஏற்பட்டுள்ள பணப் பற்றுக்குறையின் காரணமாகவும் உற்பத்தியை நிறுத்திவிட்டிருக்கின்றன"

என்று அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

திரு சோமப்பா மேலும் கூறியதாவது :—

"நெசவுத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையை, மாநில – மத்திய அரசுகளின் கவனத்துச்குக் கொண்டுவருவதற்காகப் பரமக்குடியில் 5,000 கைத்தறி நெசவாளர்கள் (இவர்களில் பெரும்பாலோர் பெண்கள்), கடந்த ஏப். 1, 2 ஆகிய நாட்களில் தாலுகா அலுவலகத்தையும், புகை வண்டி நிலையத்தையும் சுற்றி வளைத்து, 'கேரோ' போராட்டம் நடத்தினர்; இதன் விளைவாகப் பலர் கைதாகிப் பின்னர் விடுதலை அடைந்தனர்.

'அமைதியாகவே இக்கிளர்ச்சி நடந்தபோதிலும், வன்முறைக்கு இத்தகைய நிகழ்ச்சிகள் வழிகோலக்கூடும் என்பதால், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டாம்' என்று, நெசவாளர் பிரதிநிதிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை, பரமக்குடியில் மட்டுமல்ல — நாடு முழுமையும்தான் உள்ளது.

நூற்பாலைகளில் 60,000 பேல் நூல் தேங்கிக் கிடப்பதாக ஆலை உரிமையாளர் சங்கச் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

12 கூட்டுறவு நூற்பாலைகளில் 8 ஆலைகள் நூல் தேக்கம் காரணமாக மூடப்படும் நிலைமையில் இருப்பதாக தமிழகக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆந்திரத்திலும், மூன்று கூட்டுறவு ஆலைகளில் நூல் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது.

கலர்ப் புடவை நெசவைக் கைத்தறிக்கு ஒதுக்குவதுதான், கைத்தறித் தொழிலுக்கு ஏற்படும் நெருக்கடியை நிலையாகத் தீர்ப்பதற்குப் பரிகாரமாகும்.

கடந்த மார்ச் 25-ம் நாள் நடைபெற்ற அனைத்திந்தியக் கைத்தறி போர்டு கூட்டத்தில், கைத்தறித் துணித் தேக்கம் ஏற்பட்டிருப்பதன் காரணமாக, தொடர்ந்து கைத்தறி துணிக்கு விற்பனைக் கழிவுச் சலுகை அளிப்பதென் முடிவு செய்யப்பட்டுள்ளது."

ஆறு திங்களில் ரூ. 1.49 இலட்சம்

தொலைபேசிக்காக டில்லி அமைச்சர்களின் செலவு

கடந்த செப்டம்பர் 30-ஆம் நாளுடன் முடிந்த ஆறு மாத காலத்தில் மத்திய அரசின் அமைச்சர்கள், தொலைபேசிக்காக மட்டும் ரூ. 1,48,843 செலவிட்டிருக்கின்றனர்.

வணிகத்துறை அமைச்சர் திரு. தினேஷ் சிங்தான், எல்லோரையும்விட அதிகமாகதொலைபேசியைப் பயன்படுத்தியிருக்கிறார்; அவர் செலவிட்ட தொகை ரூ. 19,442.95.

மிகவும் குறைந்த அளவில் தொலைபேசியைப் பயன்படுத்தியவர் செய்தித் தொடர்புத் துறை அமைச்சர் திரு. இராம் சுபாக் சிங் ஆவார்; அவர் செலவிட்ட தொகை ரூ. 1,945.75.

தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தியின் தொலைபேசிக் கட்டணம் மட்டும் ரூ. 15,713.65 ஆகிறது

இத்தகவலை, செய்தித் தொடர்புத் துறைத் துணையமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரல் அறிவித்துள்ளார்.

இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அநீதி!

இந்திக்காரர்களுக்குப் பணிந்து விட்டார் இந்திரா

மொழி தீர்மானம் பற்றி அமெரிக்காவில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் விளக்கம்

நியூயார்க், ஏப் 4 —

"நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மொழித் தீர்மானம், இந்தி பேசாத பகுதியினருக்குப் பாதகமானதேயாகும்!

"ஆங்கிலம் அல்லது இந்தி மட்டுமே தெரிந்திருந்தால் மத்திய அரசின் வேலையில் சேர்ந்துவிடலாம் என்பது, இந்தி பேசாத மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியேயாகும்"

என்று, சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜெயபிரகாசநாராயணன் இங்கு கருத்தறிவித்தார்.

அமெரிக்காவில், கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் உள்ள இந்திய மாணவர் கழகங்களின் சார்பில் திரு. ஜெயப்பிரகாசர் உரையாற்றினார்.

அவர் தமது உரையில் கூறியதாவது :—

"இந்திய நாடாளுமன்றத்தில், இத்தகைய தீர்மானம் நிறைவேறிவிட்டது.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி, இந்திக்காரர்களின் வற்புறுத்தல்களுக்குப் பணிந்துவிட்டார்.

இந்தத் தீர்மானத்தின்மூலம் ஏற்படும் விளைவுகளை நீங்கள் கற்பனை செய்து பார்த்தால் அறிந்து கொள்ளலாம்.

தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டதாக இந்தி பேசாத பகுதியினர் கூறுகின்றனர்; உண்மையில் இது அவர்களுக்கு அநீதிதான்.

சுமை, எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை! இது, நியாயமாகாது!

இவ்வளவுக்குப்பிறகும் இந்தியாவில் இந்திய ஒருமைப்பாடு பற்றிய கருத்து நிலவுகிறது!"

அநீதி இழைத்த அனைவரும் பிடிபட்டனர்!

மசூலிப்பட்டணம், ஏப். 4—

ஆந்திரக் கிராமமொன்றில், கடந்த பிப்ரவரித் திங்களில், அரிசன சிறுவன் ஒருவனைத் தாக்கியதுடன், உயிருடன் அவனைக் கொளுத்தியது சம்பந்தமாகத் தேடப்பட்ட ஏழு பேர்களையும் போலீசார் கைது செய்துவிட்டனர்.

தமிழக அரசின் முயற்சியால் கடலைப் பருப்பு விலை குறைந்தது

மத்திய அரசின் நடவடிக்கையால் கோதுமைப் பொருள் விலை கூடியது

பங்கீட்டுக் கடைகளில் மாதம் 2 கிலோ கடலைப்பருப்பு கிடைக்கும்

சென்னை, ஏப். 4—

"சென்னை நகரில் பங்கீட்டுக் கார்டு உள்ளவர்களுக்கு மாதம் 2 கிலோ கடலைப் பருப்பும், அரை கிலோ முழுக் கடலையும் கிடைக்கும்; கடலைப் பருப்பு கிலோ ரூ. 1.64-க்கும், கடலை கிலோ ரூ. 153-க்கும் விற்கப்படும்; விரைவில் இந்த அளவும் கூடும்"

என்று, உணவு வழங்குதுறை ஆணையர் திரு. சி. நரசிம்மன் அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:—

"கடலை விளைச்சல் நன்றாக இருந்ததாலும், உபரி மாநிலங்களிலிருந்து மற்றப் பகுதிகளுக்கு பயறு வகைத் தானியங்கள் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீங்கியதாலும், கடலை, கடலைப்பருப்புகளின் கையிருப்பு அதிகரித்தது.

கடலைப்பருப்பின் விலையும் குறைந்திருக்கிறது; இது வரையில் கிலோ ரூ. 2.20-க்கு விற்றுவந்த கடலைப்பருப்பின் விலை இப்போது ரூ. 1.64-க்குக் குறைந்திருக்கிறது; கடலை விலை ரூ. 1.76-க்கு விற்றுவந்தது; இப்போது ரூ. 1.53 ஆகியிருக்கிறது.

சென்னைச் சுற்றுப் பகுதியிலும், மாநிலத்தில் குடும்பக் கார்டுகள் உள்ள மற்றப் பகுதிகளிலும், கடலை, கடலைப்பருப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

அரசு கொள்முதல் செய்துவைத்துள்ள சரக்கு, இன்னும் இரண்டு மாத காலத்துக்குப் போதுமானதாக உள்ளது. இதனையடுத்து, வெளிச் சந்தையில் நிலவும் விலைகளின் போக்கை அனுசரித்து அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கட்டுப்பாடுகள் வருவதற்கு முன்பு, தமிழகம் ஆண்டொன்றுக்கு 1.40 இலட்சம் டன் கடலை, கடலைப் பருப்பு வகைகளைப் பயன்படுத்திவந்தது; ஆனால் கட்டுப்பாடுகளின் கீழ் தமிழ்நாட்டுக்கு 50,000 டன்

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 பங்குனி 23 (5—4—68) வெள்ளி

காங்கிரசுக்காரர்களின் வியப்பூட்டும் போராட்டம்!

“இங்குள்ள காங்கிரசுக்காரர்கள், ‘கள்ளுக் கடைகளைத் திறந்தால் கூடுதலாக ரூ. 16 கோடி கிடைக்கும்; அதைக் கொண்டுவரும் திட்டமுண்டா?’ என்று கேட்கிறார்கள். யார் கேட்பது—கதர் கட்டியவர்கள் கேட்கிறார்கள்! அறிஞர் அண்ணா அவர்கள், ‘நான் கள்ளுக் கடைகளைத் திறக்கும் விஷயத்தில் இலாப-நட்டங்களைப் பார்க்கமாட்டேன்; கொள்கை அளவிலேயே ‘அது கூடாது’ என்கிறேன் எனக் கூறிவிட்டார்.”

இத்தகவலை, கல்வி-தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதே நேரத்தில், காங்கிரசுக் கட்சியால் ஆளப்பட்டுவரும் மாநிலங்களான மைசூர்—மாராட்டிரம்—ஆந்திரம் ஆகிய மூன்று மாநிலங்களும், ஏற்கனவே அரைகுறையாகச் செயலாற்றப்பட்டு வந்துள்ள மதுவிலக்கையும் ஒழித்துவிட்டதுடன், புதுப் புது மதுக் கடைகளை, தங்களுக்குள் போட்டியிட்டுக்கொண்டு திறந்துவருகின்றன.

‘அம்மூன்று மாநிலங்களிலும், மதுவிலக்கு ஒழிக்கப்படுவதை காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கவில்லையா’ என்ற கேள்வியை எவரும் கேட்கத்தான் செய்வர். தனிப்பட்ட முறையில் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த இரண்டொருவர் எதிர்த்தும் உள்ளனர். சொந்தக் கட்சியைச் சேர்ந்த அந்தத் தனி நபர்களின் எதிர்ப்பை, ஆட்சிப் பொறுப்பிலுள்ள காங்கிரசுக் கட்சியினர் பொருட்படுத்தவில்லை; காரணம், ‘கட்சி’ என்ற முறையில் அம்மூன்று மாநிலங்களிலும் உள்ள மாநிலக் காங்கிரசுக் கட்சிகள், அமைச்சர்களின் மது ஒழிப்புக் கொள்கையை வாழ்த்தி வரவேற்றிருப்பதுதான்.

மைசூரில் மதுக் குடிக்குத் தாராளமாக வசதி செய்திருப்பது, நிஜலிங்கப்பா அமைச்சரவைதான். அதைச் செய்த அதே முதலமைச்சர் நிஜலிங்கப்பா அவர்கள்தான், இன்று அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகவும் இருந்துவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த மூன்று மாநிலங்களிலும் மதுவிலக்கை ஒழித்துக் கட்டுகின்ற திருப்பணியைக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே செய்திருக்கின்றனர். அம்மாநிலங்களிலுள்ள காங்கிரசுக் கட்சிகளும் அப்போக்கை ஆதரித்துக்கொண்டிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில், ஒரிசா மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள சுதந்தரக் கட்சியும்—ஜன காங்கிரசும், மதுவிலக்கை ரத்து செய்துள்ளன. அவ்வாறு மதுவிலக்கு ரத்து செய்துவிட்டிருப்பதை, அம்மாநிலத்தில் எதிர்க் கட்சியாக இருந்துவருகின்ற காங்கிரசுக் கட்சியும் ஆதரிக்கும் என்றுதான் எவரும் எதிர்பார்ப்பர். அப்படி ஆதரிப்பதுதான், காங்கிரசுக் கட்சியின் போக்காகவும் இருந்திட வேண்டும்.

சுதந்தரக் கட்சியும்—ஜன காங்கிரசும் கூட்டாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், ஒரிசாவில் மதுவிலக்கு ஒழிக்கப்பட்டிருப்பது தவறானதாக ஆகிவிடாது. மதுவிலக்கை ஒழிப்பதில் இன்றைய ஒரிசா ஆட்சி, மதுவிலக்கை ஒழித்துக்கட்டுவதில் வழிகாட்டியாக இருக்கக்கூடிய மைசூர்—மகாராட்டிரம்—ஆந்திரம் ஆகிய மூன்று காங்கிரசு ஆட்சி நடைபெறுகின்ற மாநிலங்களையே பின்பற்றி உள்ளது என்பதுதான் உண்மை; இந்த உண்மையை மறைப்பதற்குமில்லை—மறுப்பதற்குமில்லை.

ஆனால், ஒரிசாவில் மதுவிலக்கு ஒழிக்கப்பட்டிருப்பதற்கு எதிராக, அங்குள்ள காங்கிரசுக்காரர்கள் போர்க் கொடி உயர்த்தியுள்ளனர்.

ஒரிசா அரசாங்கத்தின் மதுவிலக்கு ஒழிப்பை, ‘அரசியல் சட்டத்தை மீறிய செயலாகும்’ என்றும், ‘சமூக விரோதக் கொள்கையாகும்’ என்றும் விளக்கிக் கூறி, இன்றைய அரசாங்கத்தை எதிர்க்குமாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறது—உத்கல் பிரதேசக் காங்கிரசுக் குழு.

இதுவுமன்றி, இரண்டு நாட்களுக்குமுன், சுதந்தரக் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் சிங் தேவ் வீட்டிற்குமுன்னால், கங்காதர் மகாபத்திரா, பிரஜா மோகன் மகந்தி என்ற காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த இரு சட்டமன்ற உறுப்பினர்களும், பூரி மாவட்டக் காங்கிரசுக் கட்சித் தலைவரான பத்மசரண் சமன்சிங்கர் என்பவரும் பட்டினி கிடந்திருக்கின்றனர். இதுமட்டுமா?

முதலமைச்சர் வீட்டிற்குமுன், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த மூவர் பட்டினி கிடக்கின்ற பிரச்சினையைச் சட்டப் பேரவையில் எழுப்ப முயற்சித்து---அம்முயற்சி வெற்றி பெறாத காரணத்தால்---காங்கிரசுக் கட்சி உறுப்பினர்கள், அவையிலிருந்து வெளிநடப்பும் செய்திருக்கின்றனர்.

மதுவிலக்குக் கோட்பாட்டில் இன்றையக் காங்கிரசுக் கட்சிக்கு முழு அளவில் நம்பிக்கையில்லை என்பது, மைசூர்—மகாராட்டிரம்—ஆந்திரம் ஆகிய மூன்று காங்கிரசு மாநிலங்களிலும் மதுவிலக்குத் திட்டம் ஒழிக்கப்பட்டிருப்பதிலிருந்தே உறுதியாகிறது. இந்த நிலையில், ஒரிசா காங்கிரசுக் கட்சியினர் மட்டும் மதுவிலக்கில் தங்களுக்கு முழு நம்பிக்கை இருப்பதுபோல், மதுவிலக்கு ஒழிப்புக்கு எதிராகப் பட்டினி கிடப்பதுபோன்ற எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது விந்தையாக இருக்கிறது.

சுதந்தரக் கட்சி—ஜன காங்கிரசுக் கூட்டுக் கட்சி ஆட்சிக்குப் பதிலாக ஒரிசாவில் காங்கிரசுக் கட்சியே ஆட்சியிலிருந்து கொண்டு மதுவிலக்குக்குச் சீட்டு கிழித்திருந்தால், இன்று பட்டினிப் போராட்டத்தை மேற்கொண்ட காங்கிரசுக் கட்சியினர் என்ன செய்திருப்பார்கள்?—கள்ளுக்கடைத் திறப்பு விழாக்களில் கலந்துகொண்டு, குடிப் பழக்கத்தின் ‘சிறப்பை’ மக்களுக்கு விளக்கமாகக் கூறி, இதே காங்கிரசுக் கட்சியினர் பிரசாரம் செய்திருப்பர்!

ஒரிசாவில் மதுவிலக்கு ஒழிப்புக்கு எதிராகக் காங்கிரசுக் கட்சியினர் கிளப்பியிருக்கின்ற எதிர்ப்புப் புயல், வெறும் அரசியல் காரணங்களுக்காகத் திட்டமிட்டுக் கிளப்பப்பட்டதே ஆகும். இவர்கள் எதிர்ப்பிலிருக்கின்ற இந்த அரசியல் உண்மையை ஒரிசா மக்கள் தெரிந்துகொள்ளாமல் இருந்திட நியாயமில்லை.

மதுக் கடைத் திறப்பைக் காங்கிரசுக் கட்சியினர் மேற்கொண்டால், அது ‘நியாயமானது’ என்றும், அதையே சுதந்தரக் கட்சியும்—ஜன காங்கிரசும் செய்திட்டால், அது ‘நியாய விரோதமானது’ என்றும் மக்கள் தீர்மானித்துக்கொள்ளுவார்கள்—என, ஒரிசா காங்கிரசுக் கட்சியினர் தீர்மானித்துக்கொண்டிருப்பார்களானால், அவர்களுடைய அறியாமைக்காக வருந்தத்தான் வேண்டும்.

மற்ற அரசியல் கட்சிகள் அமைத்துள்ள ஆட்சிக்கு எதிராக மக்களைத் திரட்டக் காங்கிரசுக் கட்சியினர் எதையும் செய்வார்கள்—எப்படியும் செயல்படுவார்கள் என்பதற்கு, ஒரிசா காங்கிரசுக் கட்சியினரின் அரசியல் நாடகம் ஏற்றதோர் சான்றாகும்!

—கா. க.

மத்திய போக்குவரத்துத் துறையின் திறமையற்ற நிர்வாகம்

15,517 டயர்களுக்கு ‘ஆர்டர்’ கொடுத்து 35 டயர்களை மட்டுமே பயன்படுத்திய வினோதம்!

எல்லையோரச் சாலை அமைப்பின் பேரால் வீண் விரயம்!

புதுடில்லி, ஏப். 5—

மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சகத்தைச் சார்ந்த எல்லையோரச் சாலை அமைப்புப் பிரிவில் வீண் விரயங்கள், பல்வேறு இனங்களில் காணப்படுவதாக மத்திய தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது; அவற்றில் சில, கீழே குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன:—

“மத்திய போக்குவரத்து அமைச்சகத்தைச் சார்ந்த எல்லைச் சாலை அமைப்பு நிலையத்தில் ஏராளமான இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன.

சென்ற 1967-ம் ஆண்டு மே 31-ம் நாள் வரையில், 21லிருந்து 29 சதவீதம் வரையில் உயர்ரக இயந்திரங்கள் இந்த நிலையில் இருந்தன. நிலத்தைத் தோண்டும் இயந்திரம், கட்டிடப் பணிகளுக்கான இயந்திரம் ஆகியவை இவ்வமைப்பில் மொத்தம் 2065 இருந்தன; அவற்றில் 598 இயந்திரங்கள் மட்டுமே உண்மையாகப் பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலையில்—பயன்தரக் கூடிய வகையில் தொழிலகத்தில் இருந்தன; எஞ்சியவை புழக்கத்தில் இல்லை; அவை, உரிய வகையில் பயன்படுத்தாமல் வைக்கப்பட்டிருந்த இந்தப் பிரிவில் மற்றவகை இயந்திரங்கள் மொத்தம் 3,625 இருந்தன; அவற்றில் 775 இயந்திரங்கள் பல்வேறு வகையில் தொழிலகத்தில் பழுதுபார்ப்பதற்காக விடப்பட்டிருந்தன. இவைகள் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாகப் பழுதுபார்க்கப்படாமலேயே வைக்கப்பட்டிருந்தன.

மேலும் உதிரி உறுப்புக்கள், தளவாடத் துணைக் கருவிகள் இலட்சக்கணக்கில் இருந்தன; அவற்றில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படாத காரணத்தால், எல்லையோரச் சாலை நிறுவும் பணியின் முன்னேற்றம் மிகவும் தடைப்பட்டது.

மத்தியப் போக்குவரத்துத் துறையின் எல்லையோரச் சாலை அமைப்புப் பிரிவுக்கு 1962 ஜூலைத் திங்களில் 15,517 டயர்கள் சப்ளை செய்யவேண்டுமென ஒரு கம்பெனிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவை, 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 1963 செப்டம்பர் வரையிலான 12 மாதங்களுக்குத் தேவைப்படுமெனக் கருதி சப்ளை செய்ய உத்தரவு போடப்பட்டது; ஆனால், இந்த உத்தரவுக்கு மாறாக இந்தப் பிரிவின் வழங்குதுறை பொது இயக்குநரால் 762 டயர்கள்தான் அக்கம்பெனியிடமிருந்து பெறப்பட்டன.

ஓராண்டுத் தேவைக்கென 15 517 டயர்களுக்கு உத்தரவு போடப்பட்டு 762 டயர்கள் பெறப்பட்ட பிறகு, ஓராண்டு கழித்து 1964 மார்ச்—ஏப்ரல் மாதத்தில் கையிருப்பைத் தணிக்கை செய்து பார்த்தபோது 727 டயர்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தன; 35 டயர்கள்தான் அந்த ஓராண்டில் பயன்படுத்தப்பட்டன.

மீண்டும் இரண்டு ஆண்டுகள் கழித்து 1966-ல் கையிருப்பைத் தணிக்கை செய்து பார்த்த போதும் 570 டயர்கள் தேவைக்கு அதிகமாக இருப்பதாக அறியப்பட்டது. அதாவது இடைப்பட்ட இரு ஆண்டுகளில் 157 டயர்கள்தான் பயன்படுத்தப்பட்டன.

குறிப்பிட்டுக் கூறவேண்டுமானால் மூன்றாண்டுகளில் 192 டயர்கள் தான் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறு மீதமாக இருந்த 570 டயர்களும் தேவைக்கு அதிகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டு அவைகளை விற்றுவிடுமாறு கூறப்பட்டது.

எஞ்சிய 157 டயர்களும் 1965–66 இறுதியில்தான் பயன்படுத்தப்பட்டன.

“இவ்வாறு ஓராண்டுக்கு 15,517 டயர்கள் தேவையென மதிப்பிடப்பட்டு உத்தரவு போடப்பட்டு, 762 டயர்கள் வாங்கியும் அதனையே நான்கு ஆண்டுகள் ஆனபிறகு ‘தேவைக்கு அதிகம்’ எனப் பெரும்பாலானவற்றை விற்றுவிட முடிவு செய்தது திறமைக் குறைவேயாகும்’ என்பதை, தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியது.

ஆகவே, ‘இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

முதலிடம் வகிக்கிறது தமிழகம்

சிற்றூர்களுக்குப் புத்தொளி வழங்குவதில் காட்டிடும் தீவிரம்

54 சதவிகித கிராமங்களுக்கு மின்சார வசதியளிப்பு

புதுடில்லி, ஏப். 3—

கிராமப் பகுதிகளில் மின்சார வசதி ஏற்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!

தமிழ் நாட்டில் உள்ள மொத்தம் 14,124 கிராமங்களில் பாதிக்குமேல் (54 சதவிகிதம்) மின்சார வசதியைப் பெற்றிருக்கின்றன.

அசாம் மாநிலம்தான் இத்துறையில் மிகவும் பின்தங்கியிருக்கிறது. 25,702 கிராமங்களில் 121 கிராமங்களுக்குத்தான் (0.47 சதவிகிதம்) மின்வசதி செய்யப்பட்டிருக்கிறது.

ஏனைய மாநிலங்களில் மின்வசதி பெற்ற கிராமங்களின் சதவிகிதமாவது:—

கேரளம்: 40·25; பஞ்சாப், அரியானா: 25·30; கருநாடகம: 19·60; மாராட்டிரம்: 17·50; ஆந்திரம்: 16·75; குசராத்: 12·80; ஜம்மு-காஷ்மீர்: 9·75; உ. பி.: 9·42; பீகார்: 8·48; இராஜஸ்தான்: 5·22; மேற்கு வங்கம்: 3·72; மத்தியப் பிரதேசம்: 1·92; நாகாலாந்து: 1·60; ஒரிசா: 1·44.

1967–68-ம் ஆண்டில் கிராம மின்சார வசதித் திட்டத்துக்காக ரூ. 46·40 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாநில அரசுகளின் சக்திக்கும்—திட்டச் செயல்முறைக்கும் ஏற்ப மத்திய அரசு இதற்கு உதவி செய்துவருகிறது.

பஞ்சாப் காங்கிரசுக்குத் தலைமையின் கட்டளை!

சண்டிகார், ஏப். 4—

பஞ்சாபில் தற்போது பதவியிலிருக்கும் கில் அமைச்சரவைக்குப் பதிலாகக் காங்கிரசுக் கட்சி அமைச்சரவை அமைப்பது பற்றிய விவகாரத்தில், பஞ்சாப் காங்கிரசு சட்டமன்றக் கட்சிக்கும்—காங்கிரசுத் தலைமைக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

“காங்கிரசுத் தலைமையின் ஒப்புதல் இல்லாமல் காங்கிரசுக் கட்சி பஞ்சாபில், தனியாக அமைச்சரவை அமைக்கக்கூடாது” என்று அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சாதிக் அலி திட்டவட்டமாக அறிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

கல்லூரிகட்கு விண்ணப்பம்—ஒரே சீரான திட்டம்

திருச்சி, ஏப் 4—

கல்லூரிகளில் சேருவதற்கான மனுக்களை வாங்குவதற்கும், பதிவு செய்வதற்கும் தமிழகம் முழுவதும் வருகிற கல்வி ஆண்டில் ஒரே சீராக இருப்பதற்கான திட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகம் செயல்படுத்தவிருப்பதாகத் தெரிகிறது.

கல்லூரிகளில் சேருவதற்கான மனுக்களுக்கு 50 காசுகளும், மனுக்களைப் பதிவு செய்வதற்கு ரூ. 4–ம் வசூல் செய்வதற்கு எல்லாக் கல்லூரிகளும் ஒப்புக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

திருவரங்குளத்தில் விவசாய--கால்நடைக் கண்காட்சி

திருவரங்குளத்தில் 23—3—68 அன்று விவசாய—கால்நடைக் கண்காட்சி, முந்திரி தின விழா நடைபெற்றது.

விவசாயக் கண்காட்சியில் பல கிராமங்களிலிருந்தும் காய்கறிகள், நெல், சோளம், பழவகைகள் முதலிய விவசாயப் பொருட்கள் இடம்பெற்றன. திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் கைக்குறிச்சி பள்ளி அதிகமான பரிசுகள்பெற தகுதி வாய்ந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கால்நடை இனங்களான பொலி காளைகள், கோழிகள், கன்றுகள் கண்காட்சிக்கு வந்திருந்தன. கால்நடை பராமரிப்புப் பற்றிய விளக்கப் படங்கள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தன.

கண்காட்சியில் முந்திரிப் பொருட்காட்சி சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முந்திரிப் பழத்திலிருந்து எடுக்கப்பட்ட பழரசம் பார்வையாளர்களுக்கும், ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டது.

விவசாயத்தை மேம்பாடு செய்ய வேண்டும்; அதே நேரத்தில் மக்கட் தொகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்பதனைக் கிராம மக்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டும் பொருட்டு 'குடும்பக் கட்டுப்பாடு'ப் பகுதியைத் திருவரங்குளம் ஆரம்ப வைத்திய நிலையத்தினர் அழகாகச் சித்தரித்திருந்தனர்.

பரிசளிப்பு விழா பந்தலைத் தமிழ்த்தாய் உருவமும், கோபுரமும் அலங்கரித்தன. விழாவிற்கு ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் காசி விசுவநாதன் தலைமை வகித்தார்; திருவரங்குளம் ஆணையர் பெ. வேலாயுதம் அனைவரையும் வரவேற்றார். முந்திரிச் சாகுபடி முறைகளைப்பற்றி தஞ்சை உதவி கோட்டக் கலை வல்லுநர் எஸ். ராமு எம்.எல்.சி. எடுத்துரைத்தார். புதுக்கோட்டை உதவிக் கோட்டப் பஞ்சாயத்து அதிகாரி ப. நடராசன், அன்றும் இன்றும் உள்ள நிலைகளைப்பற்றித் திருக்குறளிலிருந்தும், புறநானூற்றிலிருந்தும் மேற்கோள் எடுத்துக்காட்டி சிறந்ததோர் சொற்பெருக்காற்றினர்.

சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயப் பொருட்களுக்கும், கால்நடை இனங்களுக்கும், கரகாட்டக் குழுவினருக்கும் புதுக்கோட்டை கோட்டாட்சித் தலைவர் யு. சூசைநாதன் பி.ஏ. பரிசுகள் வழங்கினர்.

சிறந்த முறையில் கண்காட்சியில் அலங்கரிக்கப்பட்ட 'முந்திரிப் பொருட்காட்சி' பகுதிக்கு 'சிறந்த பொருட்காட்சிப் பகுதி' என்று முடிவெடுத்துப் பரிசு வழங்கப்பட்டது.

சிறந்த பள்ளித் தோட்டமெனச் சென்ற ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட கைக்குறிச்சி பள்ளியே இவ்வாண்டும் சிறந்த முறையில் பள்ளித் தோட்டம் அமைத்திருந்ததற்காக அப்பள்ளிக்குச் சுழற் கேடயத்தைக் கோட்டாட்சித் தலைவர் வழங்கினர்.

ஆணையர் பெ. வேலாயுதம் அனைவருக்கும் நன்றி கூறினர்.

மாயூரம் தி. மா. மு. க.

அமைச்சர் நெடுஞ்செழியன் துவக்கிவைத்தார்

24—3—68 பகல் 1-மணியளவில் மாயூரம் தெற்கு ராமலிங்கத் தெருவில் இருக்கும் வடபாதிமங்கலம் சத்திரத்தில், தி. மா. மு. க. கிளையை திரு. ஆலடி அருணா பி.ஏ பி எல்., எம் எல்.ஏ. தலைமையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கிவைத்தார்; தோழர் ரெ. மகாலிங்கம் வரவேற்றார்; சு. வெங்கட்ராமன் நன்றி கூறினர்.

தோழர்கள் கோ. சிவகுருநாதன் தலைவராகவும், சு. வெங்கட்ராமன் செயலாளராகவும், ரெ. மகாலிங்கம் துணைச்செயலாளராகவும், இரா. பாலகிருட்டினன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேயிலை மோகம் !

• இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களில் ஒன்றான தேயிலைக்கு, பிரிட்டனில் மோகம் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வருகிறது !

தேயிலை அருந்தும் பழக்கத்தைப் பிரபலப்படுத்த ஒரு இயக்கமே நடத்தி, அது எந்த அளவுக்குப் பலனளித்துள்ளது என்று கணக்கெடுத்துப் பார்த்ததில் கிடைத்த விவரங்கள் இதோ :—

1967-ம் ஆண்டில் ஒரு பிரிட்டிஷ் குடிமகன், 9 பவுண்டு தேயிலையைப் பயன்படுத்தியிருக்கிறார்; ஒரு பவுண்டுக்கு 200 கோப்பைகள் வீதம் 9 பவுண்டுக்கு 1,800 கோப்பைகள் தேநீர் அருந்தியிருக்கிறார்.

ஓர் ஆண்டிற்கு 1,800 கோப்பைகள் என்றால், ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 5 கோப்பைகள் வீதம் ஆகிறது !'

கோவை கருணாநிதி படிப்பகம்

கோவை 9-வது வட்டார கலைஞர் கருணாநிதி படிப்பக நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : எம். கனகரத்தினம்; துணைத் தலைவர் : பழனிச்சாமி; செயலாளர் : கோ. ம. அன்பிறையன்; துணைச் செயலாளர் : சு. இல. காந்தன்; பொருளாளர் : இராஜாமணி; செயற் குழு உறுப்பினர்கள் : வெ. அய்யாவு, கிருட்டினசாமி, செகன்னாதன், அ. இராமசாமி, இராசு.

சென்னை 93-வது வட்ட கோ. சு. மணி நினைவு மன்றம்

சென்னை 93-வது வட்டம் தர்மாபுரத்தில் அமைக்கப்பட்ட கோ. சு. மணி நினைவு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் :—

தலைவர் : கெ. சுவாமிநாதன்; செயலாளர் : மு. பாண்டியன்; துணைச்செயலாளர் : மு. சுவாமிநாதன்; பொருளாளர் : சி. முனுசாமி.

ஏரலில் பொதுக் கூட்டம்

நிறைவேறிய தீர்மானம்

24—3—68 அன்று ஏரல் நாவலர் படிப்பகத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் திரு. ஆ. ந. கணேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. ஆர். பி. மணிமொழியன், ஆர். சனார்தனம் பி எஸ்சி, வாழை முத்தையா ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின :—

ஏரல் சிறுத்தொண்ட நல்லூர் இணைப்பு மரப்பாலம் பழுதடைந்து போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்படுகிறது அதை ஏரல் பேரூராட்சி மன்றம் உடனடியாகச் செப்பனிடவேண்டும்.

மேற்படி பாலத்தை, காங்கிரீட் பாலமாகக் கட்டுமாறு பொதுப் பணித்துறையை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழக அறிக்கை : 1/68

தி. மு. கழகப் பொதுத் தேர்தல்

1. 1967-ல் நிறைவேற்றப்பட்ட தி. மு. கழகத்தின் புதிய சட்ட திட்டங்கள், விதி 25 பிரிவு 4-ன்படி, கழகத்தின் பல்வேறு அமைப்புகளுக்கான தேர்தல் நாட்கள் கீழ்க் கண்டவாறு உறுதி செய்யப்படுகின்றன :—

	அமைப்புகள்	நாட்கள்
		1968
(அ)	சிற்றூர்-பேரூர்க் கிளைகள், பெருநகர உட்கிளைகள், சென்னை நகர வட்டக் கிளைகள்	மே 4, 5 சனி, ஞாயிறு
(ஆ)	நகர--பெருநகரக் கிளைகள்	மே 19 ஞாயிறு
(இ)	வட்டக் கிளைகள் (சென்னை நகரப் பகுதிக் கிளைகள்)	சூன் 2 ஞாயிறு
(ஈ)	மாவட்டக் கழகங்கள்	சூன் 23 ஞாயிறு
(உ)	தலைமைக் கழகம்	சூலை 21 ஞாயிறு

2. 1965 மே திங்களுக்குப் பிறகு உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்தும், புதிய உறுப்பினராகச் சேர்ந்தும், தலைமைக் கழகத்திலிருந்து முறைப்படி அனுப்பிவைக்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேர்தலில் கலந்துகொள்ள உரிமையுடையவர்கள் ஆவர்.

3. தேர்தல் நடத்தும் முறைகள், கிளைகள்—உறுப்பினர்கள்—தேர்தல் ஆணையாளர்—வேட்பாளர் ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத் தாள் போன்ற விவரங்கள், தலைமைக்கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ள 'தி. மு. கழகத் தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் விளக்கப்பட்டுள்ளன.

இந்த வெளியீட்டின் பிரதியும், திருத்தப்பட்ட புதிய சட்டத் திட்டப் பிரதியும் ஒவ்வொரு கிளைக்கும் தலைமைக் கழகத்திலிருந்து விரைவில் அனுப்பி வைக்கப்படும். தனிப்பட்ட முறையில் தேவைப்படுவோர் உரிய கட்டணம் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம்.

'அறிவகம்'
சென்னை-13.
22—3—'68

---அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி.மு.க.

ஏப்ரல் 15-ல் அறிஞர் அண்ணா புறப்பாடு

ஒரு மாத காலம் உலகச் சுற்றுப்பயணம்

அமெரிக்கா மற்றும் உலக நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செல்லவிருக்கும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், ஏப். 15-ஆம் நாள் சென்னையை விட்டுப் புறப்பட்டு, சரியாக ஒரு திங்களுக்குப்பின்—மே 15-ஆம் நாள் தாயகம் திரும்பும் வகையில் நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டுள்ளது.

விவரம் வருமாறு :—

ஏப்ரல் 15-ம் நாள் பிற்பகல் 2-30 மணிக்குச் சென்னையை விட்டு விமானம் மூலம் பம்பாய் போய்ச் சேருகிறார்; பம்பாய் மாநில ஆளுநர் மாளிகையில், ஆளுநரின் விருந்தினராகத் தங்குவார்.

ஏப். 16-ம் நாள் நள்ளிரவு 2-15 மணிக்குப் பம்பாயிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு, ரோம் நகருக்குக் காலை 9-25 மணிக்குப் போய்ச் சேருவார்; ரோம் நகரில் ஒரு நாள் தங்கி, போப் பாண்டவர் வசிக்கும் வாடிகன் நகருக்கும் செல்வார்.

ஏப். 17-ம் நாள் காலை 9-20 மணிக்கு ரோம் நகரிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு, பகல் 11-05 மணிக்குப் பாரீஸ் போய்ச் சேர்வார்.

ஏப். 19-ம் நாள் நண்பகல் 12-மணிக்குப் பாரீஸ் நகரிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டுப் பிற்பகல் 2-மணிக்கு நியூயார்க் போய்ச் சேருவார்.

ஏப் 20-ம் நாள் முதல் 26-ம் நாள் வரையில் நியூயார்க், பபலோ, நியூஹேவன் ஆகிய நகரங்களுக்குச் செல்லுவார்; நியூஹேவன் 'யேல்' பல்கலைக் கழகத்தில் அவர், சில நாட்கள் தங்குவார்.

ஏப். 26-ம் நாள் பிற்பகல் 1-19 மணிக்கு நியூஹேவன் நகரை விட்டு விமானம் மூலம் புறப்பட்டு வாஷிங்டன் நகருக்கு 3-39 மணிக்குப் போய்ச் சேருவார். வாஷிங்டனில் மூன்று நாள் தங்கியிருப்பார்.

ஏப். 29-ம் நாளன்று வாஷிங்டன் நகரைவிட்டு காலை 9-15 மணிக்குப் புறப்பட்டு சான்ஜுவான் நகருக்குப் பிற்பகல் 1-35 மணிக்குப் போய்ச் சேருவார்; அங்கு ஒரு நாள் தங்கியிருப்பார்.

ஏப். 30-ம் நாள் நண்பகல் 12-மணிக்கு சான்ஜுவான் நகரை விட்டு விமானம் மூலம் புறப்பட்டு, மியாமி நகருக்குப் பிற்பகல் 1-20 மணிக்குப் போய்ச் சேருவார்; பிற்பகல் 2-45 மணிக்கு மியாமி நகரைவிட்டுப் புறப்பட்டு, மாலை 6-45 மணிக்குக் கான்சாஸ் நகருக்குப் போய்ச் சேருவார்.

மே முதல் நாள் இரவு 7-50 மணிக்கு கான்சாஸ் நகரை விட்டுப் புறப்பட்டு இரவு 8-58 மணிக்கு லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குச் சென்று அங்கு இரண்டு நாள் தங்குவார்.

மே 3-ம் நாள் இரவு 7-30 மணிக்கு லாஸ் ஏஞ்சல்ஸ் நகரை விட்டு விமானமூலம் புறப்பட்டு, 8-45 மணிக்கு சான்பிரான்சிஸ்கோ நகரையடைவார்; அங்கு ஒரு நாள் தங்குவார்.

மே 4-ம் நாள் இரவு 9 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 5-ம் நாள் காலை 10 மணிக்கு ஹோனலுலு நகர் போய்ச் சேருவார்; அங்கு 7 மணி நேரம் தங்குவார்.

அன்று மாலை 5-10 மணிக்கு விமானமூலம் புறப்பட்டு மே 6-ம் நாள் இரவு 10 மணிக்கு டோக்கியோ நகருக்குப் போய்ச் சேருவார். அங்கு, அரங்கண்ணல் எம்.எல்.ஏ., அறிஞர் அண்ணாவைச் சந்திப்பார்.

ஹாங்காங், பாங்காக், சிங்கப்பூர் வழியாக அண்ணா அவர்கள் சென்னை திரும்புவார்.

இப்போதையத் திட்டப்படி மே 15-ம் நாள் சென்னை திரும்பக்கூடும் என்று தெரிகிறது.

மதுரை-இராமநாதபுரம் மின் திட்டக் குழுத் திட்டம்

தமிழக அரசுக்குப் பாராட்டு

தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்கத்தின் மதுரை—இராமநாதபுரம் மின் திட்டங்களின் கூட்டுக் குழுக் கூட்டம் 24—3—68-ல் பழனிக் கிளையின் செயலாளர் திரு. ஆழ்வார் தலைமையில் நடைபெற்றது.

வேலைப் பளுக் குழுவின் பணி குறித்து விரிவாகப் பேசப்பட்டது. இடைக்கால நிவாரணம், நகர் ஈட்டுப் படி ஆகியவற்றை மின்சார ஊழியர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்த தமிழக அரசினைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

நடப்பு ஆண்டிற்குச் செயலாளராக என். எஸ். இராசுவும், பு. இராமச்சந்திரன் கூட்டுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வேலைப் பளு நிவாரணம் குறித்து அரசினரால் அமைக்கப்பட்டுள்ள குழு தன்னுடைய அறிக்கையை இறுதிப்படுத்தும் நிலையில் இருப்பதால் உறுப்பினர்கள் சிறிது காலம் பொறுமையோடு இருக்கும்படி வேண்டுகோள் விடப்பட்டது.

மின்பாறைக் கிளையின் பணிமனைத் திறப்பு விழா

தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் சங்க மின்பாறைக் கிளையின் பணிமனைத் திறப்பு விழா, 27-3-68-ல், திரு. இரெ. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

திரு. ஏ. எஸ். காளை, பணிமனையினைத் திறந்துவைத்து உரையாற்றுகையில், கணக்காயர் சங்கத்தின் சிறப்பினை எடுத்துச் சொல்லி, மின்கழகத்தில் பணியாற்றும் 65,000 தொழிலாளர்களுக்கும் நல்வாழ்வு காணக் கணக்காயர் சங்கம் முன்னின்று பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

சென்னை 93-வது வட்டத்தில் புதிய மன்றங்கள்

சென்னை 93-வது வட்டம் தியாகராய நகரில் புதிதாக இரண்டு தி. மு. கழகத் துணை மன்றங்கள் அமைக்கப்பட்டன. வட்டச் செயலாளர் கோ. ச. துரை தலைமையில் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

தியாகராயநகர்-இராமகிருஷ்ணாபுரம் உஸ்மான் ரோடில் 'கலைஞர் கருணாநிதி மன்றம்' என்ற பெயரில் அமைக்கப்பட்ட மன்றத்திற்கு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் வருமாறு :—

தலைவர்: என். முனுசாமி; துணைத் தலைவர் : ஜி. பரசுராமன்; செயலாளர் : வே. பச்சையப்பன்; துணைச் செயலாளர் : எம். செகதீசன்; பொருளாளர் : சி. குப்புசாமி; பத்து பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

தியாகராயநகர், லாலா தோட்டம், மாம்பலம் நெடுஞ்சாலையில் 'மக்கள் திலகம் மன்றம்' என்ற பெயரில் அமைக்கப்பட்ட மன்றத்திற்கு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் வருமாறு :—

தலைவர் : எம். சக்ரபாணி; துணைத் தலைவர் : பி. இலட்சுமணன்; செயலாளர் : மு. சு. மணி; துணைச் செயலாளர் : சி. இராமசாமி; பொருளாளர் : எம். நரசிம்மன்; 10 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

வெள்ளக்கிணறு எம். ஜி. ஆர். மன்றம்

வெள்ளக்கிணறு எம். ஜி. ஆர். மன்ற அமைப்புக் கூட்டம், 25—3—68 அன்று தோழர் கா. பழனியப்பன் தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத் தலைவர் : வி. பி. காளிசாமி; செயலாளர் : வி. கே. பழனிசாமி; துணைச்செயலாளர் : வி. எஸ். முருகேசன்; பொருளாளர் : வி. கே. வேலுசாமி; வட்டப் பிரதிநிதி : வி. ஆர். வேலுசாமி; செயற்குழு உறுப்பினர்கள் : வி.ஜி. மாரிமுத்து, வி. எம். ஜகதீசன், வி. எம். ஆறுமுகம், வி. சி. கிட்டுசாமி, வி. எஸ். மருதாசலம்.

நடக்க இருப்பவை

7--4--68

புதுக்கோட்டை

நகர தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: அ. மாணிக்கம் எம்.சி.; பேசுவோர்: என்.வி. நடராசன் எம்.எல்.சி., மற்றும் பலர்.

மதுரை

நகர் தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு மேங்காட்டுப் பொட்டலில்; தலைவர்: கு. திருப்பதி பி.ஏ.,பி.எல்.; பேசுவோர்: எஸ். முத்து எம்.எல்.சி., எஸ்.எஸ். தென்னரசு, தங்கபாண்டியன் எம்.எல்.சி., கே.எஸ். சந்தானம் எம்.சி., காமராசு.

கிழ்வேளூர்

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்குக் கீழ வீதியில்; தலைவர்: உ. மாரியப்பன்; பேசுவோர்: மன்னை ப. நாராயணசாமி, ச. தியாகராசன் பி.ஏ.,பி.எல்., கு. கணபதி, பொ. கணபதி, ச. கலையழகன். (மணி—சாமி குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

மின்பாறை

தி.மு.க. 2-வது ஆண்டுவிழா; மாலை 6 மணிக்குக் கலைவாணர் திடலில்; தலைவர்: மு. சுப்பையன்; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., இ. இராமசாமி, மு. கண்ணப்பன் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

அண்ணாமங்கலம்

தி.மு.க. முதலாண்டு விழா; மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: க. இராமன்; பேசுவோர்: கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., மா. செங்குட்டுவன், ஆர்.ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., வை. முனுசாமி எம்.எல்.ஏ., டி. ஏ.எஸ். பாலன் பி.ஏ.,பி.எல்., எம்.சி., பாண்டுரங்கன் பி.ஏ., பி.எல்., விஜயராகவன், சகாதேவன், பக்கிரி, கிருஷ்ணசாமி, கே. அபூபக்கர்.

ஆலந்தூர்

மாதவரம் காலனி அறிஞர் அண்ணா மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்குக் கிழக்குத் தெருவில்; தலைவர்: எம். முனுசாமி; பேசுவோர்: நடிகர் வளையாபதி முத்துக்கிருட்டினன், ஆலந்தூர் எஸ். பாலன், இர. கோதண்டராமன்.

வல்லம்

தி.மு.க. சார்பில் மாலை 6 7 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: ச. கருணாகரன்; பேசுவோர்: மதுரை கூடலரசன், டி. பாப்ஜான், எஸ். இராமலிங்கம் பி.ஏ.,பி.எல்., மற்றும் பலர்.

சிவகாசி

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு பாவாடி தோட்டத் திடலில்; தலைவர்: ஏ. கணேசன்; பேசுவோர்: வே. கருணாகரன், ஏ. துரைக்கண்ணன், அ.கருக்குவேல்ராசன், எஸ். அண்ணாமலை, எஸ். செல்வராசன், அபுதாலிப், எஸ். பழனிச்சாமி.

நெல்லை

13, 6-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு பாரதியார் தெருவில்; தலைவர்: இ. நம்பி; பேசுவோர்: எம்.ஏ.மஜீத், ஏ.எல். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., மு. சூரியநாராயணன் எம்.சி., ப. இலக்குமணன் எம்.சி. (குமாரி விஜயாவின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

குழுக் கூட்டங்கள்

திருச்சி வட்ட தி. மு. க. உறுப்பினர் கூட்டம், 7—4—68 காலை 10 மணிக்கு திருச்சி தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்களும், வட்டப் பிரதிநிதிகளும் தவறாது கலந்து கொள்ளுமாறு வட்டத் துணைச் செயலாளர் வி. எம். கணேசன் கேட்டுக்கொள்கிறார்.

ஜி. டி. நாயுடுக்கு மாநகராட்சி வரவேற்பு

தொழிலியலறிஞர் கோவை ஜி. டி. நாயுடு அவர்களின் 76-வது பிறந்த நாளையொட்டி 7—4—68 மாலை 4-மணிக்கு சென்னை மாநகராட்சி மன்றச் சார்பில் வரவேற்பிதழ் படித்தளிக்கப்படும். இந்த வரவேற்பு விழா, மை லேடீஸ் பூங்காவில் நடைபெறும்; மேயர் திரு. அபிபுல்லா பேக் வரவேற்பு மடலைப் படித்துப் பேழையில் வைத்து அளிப்பார்.

மணிவண்ணன்--பத்மினி

குழுவின் கலைநிகழ்ச்சி

ஏப். 12: சென்னை 26-வது வட்டம்; 14: திண்டுக்கல்; 15: பட்டிவீரன்பட்டி; 16: நிலக்கோட்டை; 17: ஆடலூர்; 19: வேலம்புதுக்குடி (மாயூரம் வட்டம்); 20: சேங்கனூர்; 22: விளக்குடி.

தொடர்புகொள்வோர்:—மணிவண்ணன்—பத்மினி குழுவினர், 12/16, கிருட்டினசாமி கோயில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை-18.

என்.வி.என். சோமு

பி.ஏ.,பி.எல்.

சென்னை, ஏப். 3—

தி. மு. க. அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களது மகன் என். வி. என். சோமு (ந. சோமசுந்தரம்) பி.ஏ., பி.எல். அவர்கள், வழக்கறிஞராக இன்று தம்மைப் பதிவு செய்து கொண்டார்.

அணலை கிராமத்திற்கு சாலை அமைப்பு

சீரணித் தொண்டர்களின் மூன்று நாள் பணி

திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியப்பைச் சேர்ந்த திருப்பராய்த்துறை ஊராட்சியில் கடந்த 29—3—68, 30—3—68 ஆகிய நாட்களில் அணலை கிராமம் சாலை அமைப்புக்கு மண் வெட்டி சமப்படுத்தும் பணி சீரணிப் படையினரால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வேலையின் மதிப்பு ரு 700.

இந்தப் பணி திருப்பராய்த்துறை ஊராட்சித் தலைவர் டி. என். வையாளி தலைமையிலும்—துணைத் தலைவர் எம். கிருஷ்ணன், அணலை கிராம முன்சீப் ஏ. சந்திரா நிதெண்கொண்டார், வையாபுரி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

சுமார் 100 சீரணித் தொண்டர்கள் பங்கேற்றனர்.

காலைத் துண்டிக்கக்கூடிய நிலையில் எந்த மாணவரும் இல்லை

பீதியைக் கிளப்பும் காங்கிரசு ஏட்டின் அபாண்டச் செய்தி

மருத்துவக் கல்வி இயக்குநர் மறுப்பு அறிக்கை

சென்னை, ஏப். 4—

" 'சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் ஒருவரது காலைத் துண்டிக்க முடிவு செய்திருப்பதாக'க் காங்கிரசு ஏடான 'நவசக்தி'யில் வெளியான செய்தி தவறானது; ஆதாரமற்றது; இத்தகைய தவறான செய்தியை வெளியிட்டிருப்பது பொது மக்களையும், மாணவர்களையும் வீண் பீதிக்கு ஆளாக்கிப் பயமுறுத்துவதாக உள்ளது"

என்று, மருத்துவக் கல்லூரி இயக்குநர் டாக்டர் டி. சனார்த்தனம் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் அறிவித்திருப்பதாவது:—

"மருத்துவ மாணவர் மெய்யப்பன் என்பவரின் விரல்கள் முறிக்கப்பட்டதாக வெளியிட்டிருப்பது தவறு. அவரது நடு விரலில் எலும்பு முறிந்து தக்க சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது; இன்றோ, நாளையோ சிகிச்சை முடிந்து அவர் வெளியிலிருந்தபடி சிகிச்சை பெறுவார்.

பரஸ்சந்த் என்ற மாணவருக்குப் 'பேசவே வரவில்லை' என்பது தவறானது; அவர் நன்றாகப் பேசுகிறார்; அவருடைய உறவினர்களும் உடனிருந்துவருகின்றனர்; இன்னும் ஒரு வார காலத்தில் முழு நலன் பெற்று வீடு திரும்புவார்.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர்.

குண்டடி பட்ட மாணவர்கள் இந்த மருத்துவமனையில் இருப்பதாகவும், அவர்களில் ஒருவரின் கால் துண்டிக்கப்படும் என்றும் 'நவசக்தி' வெளியிட்டிருப்பது தவறான—பீதியை விளைவிக்கும் செய்தியாகும்.

குண்டடிபட்ட செங்கல்வராய நாயக்கன் இன்ஸ்டிடியூட் மாணவர் புவியரசு என்பவர், பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்; அவருக்கு வயிற்றில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது; அவர் இப்பொழுது வார்டுக்குள் நடமாடி வருகிறார்.

ஒரு மாணவரின் கால்கள் உணர்ச்சியற்று மரத்துப் போனதாகக் கூறப்பட்டிருப்பதும் தவறானதே; அப்படி எவருமிலர்."

தமிழக அரசின்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கடலை, கடலைப் பருப்புதான் ஒதுக்கப்பட்டது."

கோதுமை விலை உயர்வு

மத்திய அரசு, மார்ச் 25-ம் நாள் கோதுமைப் பண்டங்களுக்கான விலையை மாற்றியமைத்தது அதன் விளைவாக, கோதுமைப் பண்டங்களின் சில்லறை விலைகள் மாற்றியமைக்கப்பட்டன; அதன்படி, சட்டபூர்வ ரேஷன் உள்ள பகுதிகளிலும், குடும்பக் கார்டுப் பகுதிகளிலும், வாங்குவோருக்கு விலைகள் ஒரே சீராக இருக்கும்.

சீரமைக்கப்பட்ட விலைகள் வருமாறு:—

மைதா கிலோ	ரூ 1.03
சொஜ்ஜி ரவை	ரூ. 1.08
ஆட்டா மாவு	82 காசு
கோதுமைத் தவிடு	51 காசு

மருத்துவப் பட்டத் தேர்வு தள்ளிவைப்பு

மே 6-ம் நாள் நடைபெறலாம்

சென்னை, ஏப். 4—

மருத்துவக் கல்வித் தேர்வுகளை 15 நாட்களுக்குத் தள்ளிவைக்க முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

மருத்துவப் பட்டப் படிப்பு (எம்.பி.பி.எஸ்) மற்றும் கால்நடை மருத்துவத் தேர்வுகள், இத்திங்கள் 22-ஆம் நாள் துவங்க இருந்தன.

ஒத்திவைக்கப்பட்டால், மே 6-ம் நாள் நடைபெறும்.

இது பற்றிய திட்டவட்டமான அறிவிப்பை இரண்டொரு நாளில் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிடும்.

மருத்துவக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்விப் பட்டப் பிற்காலத் தேர்வுகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு

எஸ் எஸ்.எல்.சி. தேர்வு நேற்று (4—3—68) தமிழகமெங்கும் தொடங்கியுள்ளது.

இவ்வாண்டு 980 இடங்களில் 2,02,000 மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள்.

சென்னையில் மட்டும் ஐம்பது இடங்களில் போலீசுப் பாதுகாப்புடன் தேர்வு எழுதுகின்றனர்.

"எந்தவிதமான விரும்பத்தகாத நிகழ்ச்சியும் நடைபெறவில்லை" என கல்வித்துறை இயக்குநர் திரு. எம். டி. பால் அறிவித்தார்.

சென்ற ஆண்டு 1,80,000 மாணவர்கள்தான் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதினார்கள்.

ஏப்ரல் 9-ஆம் நாள் மொகரம் விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருப்பினும், தேர்வு நடைபெறும்.

ஏப். 10-ஆம் நாள் தேர்வு எதுவும் இருக்காது.

'கொழிஞ்சி விதை' என்று சொல்லி அரிசி மூட்டை கடத்தல்

வியாபாரிகளுடன் சேர்ந்து இரயில்வே அதிகாரிகளும் ஈடுபட்டனர்

தஞ்சை மாவட்டத்தில் ஐவர் கைது--காவல்துறையின் தீவிர நடவடிக்கை

தஞ்சாவூர், ஏப். 4—

தஞ்சை மாவட்டத்திலிருந்து கேரளத்துக்கு அரிசி கடத்தியதாக இரு உதவி இரயில்வே நிலைய அதிகாரிகளும் (உதவி ஸ்டேஷன் மாஸ்டர்கள்), மூன்று வணிகர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செப்டம்பர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் இரயில் வாகன்கள் மூலம் 700 மூட்டை அரிசி—மூன்று தடவைகளில்—பாபநாசத்திலிருந்து கேரளத்துக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனையொட்டியே பாபநாசம் இரயில் நிலையத்தைச் சேர்ந்த இரு உதவி அதிகாரிகளும், கும்பகோணத்தைச் சேர்ந்த மூன்று நெல் வியாபாரிகளும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

'கொழிஞ்சி விதை' என்ற பெயரில் அரிசி மூட்டைகளை கோழிக்கோட்டிலுள்ள ஒரு போலியான முகவரிக்கு அனுப்பப்பட்டனவாம்.

பாபநாசத்திலிருந்து கோழிக்கோட்டுக்கு 'புக்' செய்யப்பட்ட 300 மூட்டை அரிசியை தஞ்சை இரயில் நிலையத்தில் சிறிது நாட்களுக்குமுன் உணவு வழங்கு துறை அதிகாரிகள் கைப்பற்றினர்; அது தொடர்பான புலனாய்வு நடைபெற்றது.

சட்டமன்ற மேலவைத் தேர்தல்

தஞ்சை--திருச்சி பட்டதாரிகள் தொகுதி

★

கழக வேட்பாளர்

வி. இராசகோபால் பி.ஓ.எல்.

தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தலில் தஞ்சை—திருச்சி பட்டதாரிகள் தொகுதிக்குக் கழக வேட்பாளராகத் திரு. வி. இராசகோபால் பி.ஓ.எல். அவர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார் என்பதைத் தலைமைக் கழகம் ஏற்கனவே அறிவித்திருக்கிறது.

இந்நிலையில், அத்தொகுதியில் வேட்பாளர்களாகப் போட்டியிடுபவர்களில் ஒருவர், தாம் கழக ஆதரவுபெற்ற வேட்பாளர் என்று விளம்பரப்படுத்தி வருவதாகத் தெரிகிறது.

எனவே, கழக அமைப்புகளும், கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், வாக்காளர் பெருமக்களும் அது போன்ற செய்திகளைப் பொருட்படுத்தாமல், கழக வேட்பாளரான திரு. வி. இராசகோபால் பி.ஓ.எல். அவர்களுக்குப் பேராதரவு அளித்து வெற்றி தேடித்தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம், தி. மு. க.

வருந்துகிறோம்

திரு. காஞ்சி—கல்யாணசுந்தரம் அவர்களின் 'சம்பந்தி'யார் காஞ்சி. திரு. எம். ஏ. பச்சையப்பனார் அவர்கள் கடந்த 31—3—68 அன்று தமது 76-வது வயதில் இயற்கையெய்திய செய்தியறிந்து வருந்துகிறோம்.

அன்னார் மறைவால் துயருறும், அவர் தம் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த வருத்தத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். —ஆசிரியர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.